**OS.NO. 26/2020 PW-1**

நாள் : 22.04.2024

பெயர் : குப்பன் (எ) குப்புசாமி

த/பெ : பெருமாள்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் தற்போது தாவாவில் கூறியுள்ள தெரு/வழிக்கு பெயர் உள்ளதா என்றால் பஜனைகோயில் தெரு ஆகும். உங்கள் வீட்டிற்கு கதவிலக்கம் உள்ளதா என்றால் ஆமாம் 152 ஆகும். தாவா சொத்தை நீங்கள் யாரிடம் எப்போது கிரயம் பெற்றேன் என்றால் நான் காலம் காலமாக அங்கேயே வசித்து வருகிறேன். எனக்கு 03.06.1992 அன்று பட்டா வழங்கப்பட்டது அதன் அடிப்படையில் நான் வசித்து வருகிறேன். சொத்தின் சர்வே எண்.151/42 ஆகும். அந்த பட்டா எத்தனை பேருக்கு கொடுக்கப்பட்டது என்றால் அந்த பட்டா கூட்டு பட்டாவாகும். அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. கூட்டு பட்டாவில் உள்ள நபர்கள் அனைவரும் உங்களுடன் பிறந்தவர்களா என்றால் இல்லை. பங்காளிகள் ஆவார். கூட்டு பட்டாதாரரின் பெயர்கள் தெரியுமா என்றால் ஆமாம். கோவிந்தசாமி, சின்னப்பா, முனிசாமி, வடிவேல், வெங்கடேஷ், காசி, பெரியப்பா மகள் ராமிஅம்மாள், அப்பாசாமி மனைவி முனியம்மாள், மற்றும் என்னுடைய பெயரில் பட்டா வழங்கப்பட்டது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**